**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 37/2023** **Date:23.03.2026.**

**(PW2)- Robert Raj**

**பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனக்கு 65 வயது என்றால் சரிதான். இவ்வழக்கின் 1 ஆம் பிரதிவாதி யார் என்றால் எனது சகோதரி ஆவர். மேற்படி 1 ஆம் பிரதிவாதி 22.06.2024 ல் காலமானர் என்றால் சரிதான். அவர் காலமாகும் சமயத்தில் அவருக்கு 71 வயது இருக்கும் என்றால் சரிதான். எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கு 8 வயது வித்தியசம் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு 20 வயதில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அவருக்கு திருமணம் நடைபெற்ற சமயத்தில் எனக்கு 12 வயது என்றால் சரிதான்.

2. 1ம் ஆம் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்ற சமயத்தில் மேரிஜோசபின் என்ற மகள் S.S. ராயனுக்கு இருந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, நேரடியாக தெரியும். மேற்படி ஜோசபினுக்கு தாயார் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை S.S. ராயனுக்கு திருமணம் செய்யும் சமயத்தில் அவருக்கு வேறு திருமணம் நடைபெறவில்லை என்ற விபரம் தெரிந்து தான் திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணம் மேரிஜோசபின் மாற்றி சான்றிதழ் என்றால் சரிதான்.

3. மேற்படி சான்றிதழ்லில் மேரிஜோசபின் தலைபெழுத்து T.C என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது யாரை குறிக்கிறது என்று தெரியாது. S.S. ராயனுக்கு மேரிஜோசபின் யார் மூலம் பிறந்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். S.S. ராயன் வாதியை தத்தெடுக்கவில்லை என்றால் சரிதான். நான் திருவனந்தபுரம் முட்டடா என்ற இடத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேரிஜோசபின் கணவரும் எனது பகுதியை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான்.

4. வாதி S.S. ராயன் வீட்டில் உதவி செய்த காரணத்தினால் அவர் வாதியை படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. வாதி S.S. ராயனின் மகள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தற்போது தாக்கல் செய்யமுடியாது. வாதி இவ்வழக்கை

எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியை S.S. ராயனின் மகள் என்று விளம்புகை செய்யவேண்டி தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு கேட்பது வாதி இறந்து போன S.S. ராயனின் சொத்தில் உரிமைவேண்டி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. வாதியின் கணவர் எனது உறவினர் என்பதால் நான் வாதிக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

மேற்படி சங்கதி எனக்கு படித்து காட்டப்பட்டு நான் புரிந்து கொண்டபின் கையெழுத்து செய்கிறேன்.

**(ஒப்பம்)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**இரணியல்.**